**கிழக்கு மாகாண சபையின்- 2013**

கிழக்கு மாகாண சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு, 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையானது மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின்படி வழங்கப்படுகின்றது. இந்த அறிக்கையில் காணப்படுகின்ற அவதானிப்புகள் தொடர்பாக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய விரிவான அறிக்கையொன்று காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் கணக்காய்வுக் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கிழக்கு மாகாண சபையின்

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கிழக்கு மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிழக்கு மாகாண சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றதென்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பித்தல்**

(அ) நிதிக்கூற்றுக்களின் ஒருங்கிணைந்த ஒரு பகுதியாக உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 மே 31 இல் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளினை சமர்ப்பித்தல் தொடர்பான செயன்முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | கணக்குகளின் வகை | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 34 | 34 | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 01 | - | 01 |
| (iii) | அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்குகள் | 34 | 33 | 01 |
| (iv) | வர்த்தக முற்பணக் கணக்கு | 08 | - | 08 |
| (v) | நிதியக் கணக்குகள் | 02 | 01 | 01 |
| (vi) | நியதிச்சட்ட கணக்குகள் | 02 | 01 | 01 |
| | மொத்தம் | 81 | 69 | 12 |

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களின் சேகரிப்புகள் தொடர்பில் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாகாண வருமான திணைக்களத்தின் 03 சேமிப்புக் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 667,440,011 கூட்டு மாத்தத் தொகையான மீதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 29 மாகாணத் திணைக்களங்களிற்கு சொந்தமான பல்வேறு வகைப்பட்ட 580 வாகனங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மாகாண சபைகளின் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதியை கணிப்பிடுகையில் ரூபா 173,655,920 தொகையான ஆரம்ப மீதிகள் கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 2,342,758 கூட்டு மொத்தத் தொகையான செலுத்த வேண்டிய இரண்டு கணக்கு மீதிகள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் என புறம்பாக காண்பிக்கப்படாது மாறாக மேற்குறிப்பிட்ட மீதிகள் பெறவேண்டிய மொத்த மீதிகளிற்கு எதிரீடு செய்யப்பட்டு தேறிய மீதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக, பெறவேண்டிய மீதி அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புகளின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது மீளளிக்க வேண்டிய வைப்புக்களின் தீர்ப்பனவு ரூபா 393,313,649 ஆகும். எவ்வாறாயினும், வைப்புக்களிலிருந்து காசு வெளிப்பாய்ச்சலாக ரூபா 22,870,235 மாத்திரம் காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) வைப்புக் கணக்கு தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிக்கும் மாகாண சுகாதார திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட மீதிக்கும் இடையில் ரூபா 17,549,097 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண திணைக்களத்திலிருந்து பெறவேண்டிய கட்டுநிதி மீதிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் மாகாண சுகாதார திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 19,444,844 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டிற்கான நான்கு விடயங்களின் வருமானச் சேகரிப்புகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட தொகைக்கும் மாகாண வருமானத் திணைக்களத்தால் பேணப்பட்ட பதிவேடுகளில் காட்டப்பட்ட தொகைக்கும் இடையில் ரூபா 92,344,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மாகாண சபையின் ஒன்பது நிறுவனங்களின் ரூபா 35,811,107 கூட்டு மொத்தத் தொகையான பதவியணியினர் கடன் மீதிகள் 4 ஆண்டுகளிற்கும் மேலாக நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வுபெற்ற, வேலை இடைநிறுத்தப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 13,601,853 கூட்டு மொத்தத் தொகையான நிலுவைக் கடன் மீதிகளை பிணையாளர்களிடமிருந்தோ அல்லது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்தோ அறவிடுவதற்கு இரண்டு மாகாண அமைச்சுக்களினாலும் இருபத்தி மூன்று திணைக்கங்களினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மாகாண சபையின் 20 முன்னாள் உறுப்பினர்களுடன் தொடர்புடைய ரூபா 1,017,480 கூட்டு மொத்தத் தொகையான நிலுவைக் கடன் மீதிகள் ஒன்றரை ஆண்டுகளிற்கும் மேலாக அறவிடப்படாது இருந்தது. எவ்வாறாயினும், நிலுவையாகவுள்ள மீதிகளை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்வுக்கான சான்றின்மை

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக வழங்கப்பட்ட 49 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் 2014 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் சமா்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்கள் தொடர்பில் கணிப்பிடக்கூடியதாகவிருந்த கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 47,970,562 ஆகும்.

(ஆ) பின்வரும் ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | தொகை | கணக்காய்விற்கு கிடைக்கப்பெறாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| வாகனங்கள் | 83,816,810 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை, வாகனங்களின் பதிவேடு |
| தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 123,020,002 | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 36,797,807 | |
| கட்டிடம் மற்றும் கட்டமைப்புகள் | 668,254,031 | |
| காணி | 5,426,390 | நிலையான சொத்துக்கள் பதிவேடு, காணி உரித்துறுதிகள் |

### 2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 571 | 02 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 06 திணைக்களங்களில் இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாக இருந்த ரூபா 16,323,628 கூட்டு மொத்தத் தொகையான வைப்புக்கள் தொடர்பில் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கிழக்கு மாகாண நிதிப் பிரமாணங்கள் | |
| (i) மா.நி.பி 215 | சகல கட்டுநிதி மீதிகளும் தொடர்ந்துவரும் நிதி ஆண்டின் முதலாவது வேலை நாளில் மாகாண திறைசேரிக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,340,292 கூட்டு மொத்தத் தொகையான கட்டுநிதி மீதிகள் 03 மாகாண திணைக்களங்களால் 2014 ஒக்தோபர் 31 வரையும் தீர்க்கப்படாது இருந்தது. |
| (ii) மா.நி.பி 258.3 | கிழக்கு மாகாணத்தின் ஒருங்கிணைந்த வருடாந்த வருமானக் கூற்று மற்றும் ஒருங்கிணைந்த நிலுவை வருமானக் கூற்று என்பன 2014 ஏப்ரல் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2008 முதல் 2013 வரையான ஆண்டுகளிற்கான அந்த ஒருங்கிணைந்த வருமானக் கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 31 வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (iii) மா.நி.பி 326.2 | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிலையான சொத்துக்கள் பயன்பாட்டுக் கூற்று 2014 ஏப்ரல் 30 அன்று அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த ஒருங்கிணைந்த கூற்றுக்கள் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) மா.நி.பி 365 | 05 திணைக்களங்களால் மீளாய்வாண்டிற்காக வருடாந்த மெய்மையாய்வுச் சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள்- 2006

| | |
|---|---|
| 2.8.2 ஆம் அத்தியாயம் | அரசாங்க கொள்வனவு நடைமுறைகளின் வெளிப்படைத்தன்மையினை உயர்த்துவதற்கு இயலுமான விதத்தில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு குறைந்தது மூன்று உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்திற்குரிய தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவிற்கு தனியொரு உறுப்பினரையே நியமித்திருந்ததுடன் ரூபா 20.6 மில்லியன் மொத்த மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 22 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

(ஈ) சுற்றறிக்கை

(i)பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| • 2007 மே 11 ஆந் திகதிய 09/2007 ஆம் இலக்கம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், தலைவர் மற்றும் தொழிற்பாட்டு பணிப்பாளர் பதவிக்கான ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் முறையே ரூபா 20,000 மற்றும் ரூபா 17,500 ஆக காணப்பட வேண்டிய போதிலும், முன்பள்ளி பாடசாலை கல்விப் பணியகத்தினால் தலைவரிற்கான சம்பளமாக ரூபா 35,000 தொகையும் தொழிற்பாட்டு பணிப்பாளரிற்கான சம்பளமாக ரூபா 30,000 |

| | |
|---|---|
| | தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, பணியகத்தினால் 2010 முதல் 2013 வரையான ஆண்டுகளின் போது ஓய்வுபெற்ற 03 உத்தியோகத்தர்களிற்காக ரூபா 1,654,500 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |
| • 2007 ஆகஸ்ட் 21 ஆந் திகதிய 09/2007(1) ஆம் இலக்கம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், எந்தக் காரணத்திற்காகவும் அரச சேவையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட பதவியொன்றிற்கு 67 வயதினை கடந்த நபரொருவரை நியமித்தலாகாது. இருப்பினும், 69 வயதுடைய நபரொருவர் முன்பள்ளி பாடசாலை கல்விப் பணியகத்தால் 2010 யூன் 01 ஆந் திகதியிலிருந்து செயற்பாட்டு பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில், மேற்குறிப்பிட்ட செயற்பாட்டு பணிப்பாளரிற்கு சம்பளமாக ரூபா 1,290,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை | |
| • 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க சுற்றறிக்கை | அழைப்பிதழ்கள், நாட்குறிப்புக்கள், வாழ்த்து அட்டைகள் போன்றவற்றின் அச்சடித்தல் நடவடிக்கைகளிற்காக மேற்கொள்ளப்படும் செலவினத்தை வரையறுத்தல் வேண்டுமென ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மாகாண திறைசேரி மற்றும் பேரவைச் செயலகத்தினால் 02 சந்தர்ப்பங்களில் ரூபா 3,438,000 செலவழித்து வாழ்த்து அட்டைகளும் நாட்குறிப்புக்களும் அச்சிடப்பட்டிருந்தன. |
| • மாகாண திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| 2013 திசெம்பர் 02 ஆந் திகதிய பிரீ/09/2013 ஆம் இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய ரூபா 56,888,623 கூட்டு மொத்தத் தொகையான நானாவித வைப்புக்கள் தொடர்பில் வருடாந்த வைப்புக்களின் கணக்கிணக்கக் கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| 2013 திசெம்பர் 23 ஆந் திகதிய பிரீ/11/2013 ஆம் இலக்கம் | 04 அமைச்சுக்கள் மற்றும் 07 திணைக்களங்களினால் மூலதன செலவினங்களிற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்த ரூபா 231,722,276 ஆன தொகை நடைமுறையல்லா சொத்துக்களின் அசைவின் கீழ் கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. |

## 3. வருமான முகாமைத்துவம்

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கடந்த 05 ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரங்கள் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான | | | | |
|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| வரி வருமானம் | 1,860 | 1,496 | 1,354 | 951 | 137 |
| வரியல்லா வருமானம் | 288 | 309 | 198 | 224 | 255 |
| மொத்தம் | 2,148 | 1,805 | 1,552 | 1,175 | 392 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கான மாகாண சபையால் தயாரிக்கப்பட்ட வருமான மதிப்பீட்டின் பிரகாரம், மதுபான அனுமதிப்பத்திர கட்டணத்திலிருந்தான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 30,000,000 ஆகும். எவ்வாறாயினும், மதுபான அனுமதிப்பத்திர கட்டணமாக மீளாய்வாண்டில் ரூபா 15,211,496 தொகை மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாணத்தினுள் செயற்படுகின்ற அனுமதிக்கப்பட்ட மதுபான விநியோகத்தர்களின் விபரங்கள் மாகாண சபையில் காணப்படவில்லை. இதன் விளைவாக, மாகாணத்தினுள் செயற்படுகின்ற சகல அனுமதிக்கப்பட்ட மதுபான விநியோகத்தர்களிடமிருந்தும் அனுமதிப்பத்திர கட்டணத்தை சேகரிப்பதற்காக மாகாண சபையால் முறையான நடவடிக்கையினை எடுக்க முடியாதிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் போது வருமான சேகரிப்பு கீழே விபரிக்கப்பட்டவாறு குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருந்தது. அனுமதிப்பத்திர கட்டணங்களை செலுத்தாதுள்ள அனுமதிக்கப்பட்ட விநியோகத்தர்கள் தொடர்பான தகவல்களை

பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக அனுமதிப்பத்திர கட்டணங்களை செலுத்தாதுள்ளோர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு மாகாண சபைக்கு முடியாதிருந்தது.

| **மாவட்டத்தின் பெயர்** | **ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட தொகை** | |
|---|---|---|
| | 2013<br>ரூபா | 2012<br>ரூபா |
| அம்பாறை | 2,218,625 | 4,891,500 |
| மட்டக்களப்பு | 12,992,871 | 16,665,538 |
| மொத்தம் | 15,211,496 | 21,557,038 |

(ஈ) நியதிச்சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், உள்ளூராட்சி அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள் மற்றும் ஆதனங்களை கைமாற்றுவது தொடர்பில் விதிக்கப்பட்ட முத்திரை வரிகள் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் கோரப்பட்டிருக்காமை காரணமாக உரிய உள்ளூராட்சி அதிகார சபைகளிற்கு அனுப்பப்படாமல் மாகாண சபையினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு உரிய உள்ளூராட்சி அதிகாரசபைகளிற்கு அனுப்பப்படாமல் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண வருமானத் திணைக்களத்தின் சேமிப்பு கணக்குகளில் இது தொடர்பில், ரூபா 667,440,011 தொகை காணப்பட்டது.

(உ) இறைகள், வாடகைகள், குத்தகைகள் போன்ற பிரதான வருமான மூலங்களிலிருந்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 477,402,104 மொத்தமான வருமானத்தை சேகரிப்பதற்கு கிழக்கு மாகாணத்தில் செயற்படுகின்ற நாற்பத்தி நான்கு உள்ளூராட்சி அதிகாரசபைகள் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| உள்ளூராட்சி அதிகாரசபை | உள்ளூராட்சி அதிகாரசபைகளின் எண்ணிக்கை | மொத்த நிலுவைத் தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| மாநகர சபைகள் | 3 | 158,766,597 |
| நகரசபைகள் | 5 | 148,675,423 |
| பிரதேச சபைகள் | 36 | 169,960,084 |
| மொத்தம் | 44 | 477,402,104 |

## 4. நிதி மீளாய்வு

### 4.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் பற்றாக்குறை ரூபா 16,049,131 ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 321,296,432 ஆக இருந்தமையால், நிதி விளைவுகளில் ரூபா 305,247,301 முன்னேற்றம் காட்டப்படுகிறது. மீளாய்வாண்டில் கிடைத்திருந்த ஒட்டுமொத்த மானியங்கள் ரூபா 1,328,996,000 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் கடைத்திருந்த முத்திரை தீர்வை ரூபா 228,144,971 ஆல் அதிகரித்திருந்தமை நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களிப்புச் செய்திருந்தது.

### 4.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் மொத்தச் செலவினம் ரூபா 21,050 மில்லியனாக இருந்ததுடன் அதில், ரூபா 14,042 மில்லியன் தொகையானது மீண்டெழும் செலவினத்திற்காக ஏற்பட்டிருந்தது. அது மொத்தச் செலவினத்தில் 67 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தது. மொத்த மீண்டெழும் செலவினத்தில், ரூபா 11,176 மில்லியன் ஆளணி வேதனங்களிற்காக ஏற்பட்டிருந்ததுடன் அது மொத்த மீண்டெழும் செலவினத்தில் 79 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டிற்கான நேரொத்த மீண்டெழும் செலவினம் ரூபா 12,807 மில்லியனானதுடன் அது அந்த ஆண்டிற்கான மொத்தச் செலவினத்தின் 92 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவினம் ரூபா 5,873 மில்லியனால் அதிகரித்திருந்தமைக்கு மீளாய்வாண்டிற்கான மொத்த செலவினத்திலேற்பட்ட அதிகரிப்பே பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

(அ) மாகாணத் திறைசேரியால் 08 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளிற்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 03 வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் மாத்திரம் செயற்பட்டிருந்தன. இது தொடர்பில், செயற்பாட்டில் இல்லாதிருந்த வர்த்தக முற்பணக் கணக்குகளை கணக்கொழிப்பதற்காக மாகாண நிதி விதி இல. 286 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணனிமயப்படுத்தப்பட்ட போக்குவரத்து முகாமைத்துவ முறைமை மற்றும் நேர அட்டவணை காட்சிப்படுத்தல் பலகை முறைமை என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்காக கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை ரூபா 1,680,000 தொகையினை செலவிட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்கான வசதிகள் இன்மை காரணமாக அந்த முறைமைகள் கணக்காய்வுத் திகதியான

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதி வரை அதிகாரசபையால் தொடங்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, அந்த முறைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்பட்ட செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது.

(இ) மாகாண காணி நிர்வாகத் திணைக்களம் மற்றும் மாகாண கல்வித் திணைக்களம் என்பவற்றினால் 56 அனுமதிப்பத்திர வழிகாட்டுங்குறிப்புக்களின் (License Keys) கிரயம் உள்ளடங்கலாக (Genuine License and Manual with DVD-OEM Genuine) ரூபா 4,386,000 மொத்தக் கிரயத்தில் 56 மேசைக் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அந்த அனுமதிப்பத்திர வழிகாட்டுங்குறிப்புகள் குறித்துரைத்த மாதிரிகளின் பிரகாரம் வழங்குநரால் வழங்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, ஒரு தரமான அனுமதிப்பத்திர வழிகாட்டுங்குறிப்பின் சந்தை விலை ரூபா 21,500 ஆக காணப்பட்டமையால் வழங்குநருக்கு ரூபா 1,204,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) அரசாங்க காணிகளிற்கான குத்தகை வருமானத்துடன் தொடர்புடைய பின்வரும் ஐந்து மாவட்ட செயலகங்களின் ரூபா 76,875,109 மொத்தமான வருமானம் 2009 தொடக்கம் 2013 திசெம்பர் 31 வரை நிலுவையாக இருந்தது. எவ்வாறாயினும், அந்த நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| பிரதேச செயலகங்களின் பெயர் | 2013 திசெம்பர் 31 வரையான நிலுவை வருமானம் |
|---|---|
| | ரூபா |
| கல்முனை | 215,000 |
| சம்மாந்துறை | 513,975 |
| மண்முனை வடக்கு | 224,968 |
| பட்டணமும் சூழலும் | 11,422,260 |
| குச்சவெளி | 64,498,906 |
| மொத்தம் | 76,875,109 |

## 5.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

(அ) உள்ளபடியான தேவையினைக் கருத்திற்கொள்ளாது திருகோணமலை பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவு அலுவலகத்தால் மருந்துகள் மிகையாக பெறப்பட்டிருந்தன. இதன் விளைவாக, ரூபா 671,750 பெறுமதியான மருந்துகள்

காலாவதியாகியிருந்ததுடன் அந்த காலாவதியான மருந்துகள் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2013 திசெம்பர் 11 வரை களஞ்சியத்தில் பேணப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 4,844,631 பெறுமதியான பன்னிரண்டு வகையான தரமற்ற மருந்துகளை மருத்துவ தொழில்நுட்ப மற்றும் வழங்கல் பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு மீளக் கையளிப்பதற்கோ அல்லது பொருத்தமான ஒழுங்குமுறையை எடுப்பதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது மூதூர் ஆதார வைத்தியசாலை களஞ்சியத்தில் பேணப்பட்டிருந்தமை 2013 ஆகஸ்ட் 13 இல் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

(இ) ரூபா 2,587,200 பெறுமதியான ஒன்பது வகை தரமற்ற மருந்துகளை மருத்துவ தொழில்நுட்ப மற்றும் வழங்கல் பிரிவின் பணிப்பாளர் அலுவலகத்திற்கு மீளக் கையளிப்பதற்கோ அல்லது பொருத்தமான ஒழுங்குமுறையை எடுப்பதற்கோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது பிராந்திய மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியங்களில் பேணப்பட்டிருந்தமை 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது

(ஈ) வனெல்ல, மூதூர், கின்னியா, கச்சக்கொடித்தீவு மற்றும் நடுஊற்று போன்ற வைத்தியசாலைகளின் உள்ளபடியான தேவைகளைக் கருத்திற்கொள்ளாமல் மிகையாக மருந்துகள் பெறப்பட்டிருந்தன. இதன் விளைவாக, ரூபா 3,378,355 பெறுமதியான மருந்துகள் காலாவதியாகியிருந்ததுடன் அந்த காலாவதியான மருந்துகள் கணக்காய்வுப் பரிசோதனைத் திகதியான 2013 ஆகஸ்ட் 14 வரை களஞ்சியத்தில் பேணப்பட்டிருந்தன.

**5.3 மாகாண வீதிகளின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருக்கல்மடம் அம்பிலாந்துறை இறங்குதுறையை புதுப்பிப்பதற்காக மாகாண வீதி வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் 2013 மார்ச் 06 ஆந் திகதி ரூபா 519,100 கிரயத்தில் வழங்கப்பட்ட ஒப்பந்தம் 2013 யூன் 11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், நிர்மாண வேலைகள் 2014 நவம்பர் 30 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரர் உடன்பட்ட காலத்திற்குள் வேலையை தொடங்குவதற்கு தவறியிருந்த போதிலும் உரிய வங்கியிடமிருந்து செயலாற்றல் பிணைமுறியை காசாக்குவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளரினால் பின்வரும் 09 மாகாண வீதிகளின் முன்னேற்றத்திற்காக வழங்கப்பட்ட ஒப்பந்தங்கள் உரிய திகதிக்குள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என சான்றுறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மட்டக்களப்பு வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் களஞ்சியக் காப்பாளரால் குறித்த வேலைகளின் பூர்த்தியாக்கல் திகதியின் பின்னர் அந்த ஒன்பது ஒப்பந்தகாரர்களிற்கும் தார் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே, களஞ்சியக் காப்பாளரால் வழங்கப்பட்ட ரூபா 2,120,230 பெறுமதியான 21,635 லீற்றர் தார் அவை வழங்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| வேலையின் தன்மை | பிரதம பொறியியலாளரால் வழங்கப்பட்ட சான்றுபடுத்தலின் பிரகாரம் பூர்த்தியாக்கல் திகதி | களஞ்சியக் காப்பாளரிடமிருந்து பெறப்பட்ட கூற்றின் பிரகாரம் தார் வழங்கிய திகதி | வேலை பூர்த்தியாக்கல் திகதியின் பின்னர் வழங்கப்பட்ட தாரின் அளவு |
|---|---|---|---|
| | | | லீற்றர்கள் |
| துறைநீலாவனை இறங்குதுறை வீதியின் பராமரிப்பு | 2013 திசெம்பர் 24 | 2013 திசெம்பர் 26 | 2,160 |
| றொசைரோ வீதியின் பராமரிப்பு | 2013 யூன் 02 | 2013 யூன் 11 | 575 |
| களுவாஞ்சிக்குடி குருமண்வெளி இறங்குதுறை | 2013 ஒப்தோபர் 08 | 2013 நவம்பர் 20 | 900 |
| குடியேக்குரப்பு காலிகோவில் வீதி | 2013 ஒக்தோபர் 05 | 2013 நவம்பர் 01 | 1,620 |
| ஒன்தாச்சிமடம் மஹிலூர் குருமண்வெளி | 2013 திசெம்பர் 05 | 2013 திசெம்பர் 26 | 1,620 |
| பர்த்திவே பளுகாமம் தம்ப் | 2014 திசெம்பர் 24 | 2014 சனவரி 17 | 1,620 |
| மிலங்கரச்சி வீதி | 2013 நவம்பர் 12 | 2013 திசெம்பர் 23 | 6,120 |
| றொபேட்சன் வீதி | 2013 திசெம்பர் 10 | 2013 திசெம்பர் 11 | 2,340 |

| | | | |
|---|---|---|---|
| பன்குடாவெளி வீதி | 2013 நவம்பர் 29 | 2013 திசெம்பர் 20 | 4,680 |
| மொத்தம் | | | 21,635 |

## 5.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் 2006 சனவரியில் வெளியிடப்பட்ட அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் 2006 இன் பிரகாரம், அரசாங்க கொள்வனவு நடைமுறைகளின் வெளிப்படையான தன்மையினை மேம்படுத்துவதற்கு முடியுமான விதத்தில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களைக் கொண்டிருந்தல் வேண்டும். எவ்வாறானினும், சிவில் வேலைகள் ரூபா 2 மில்லியனை விட குறைவாக இருக்கும் போதும் பொருட்கள் மற்றும் வழங்கல்களின் பெறுமதி ரூபா 500,000 இனைக் காட்டிலும் குறைவாக உள்ள போதும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவிற்கு தனியொரு உறுப்பினரை நியமிக்க முடியுமென குறிப்பிட்டு 2010 யூலை 17 ஆந் திகதிய பிரீ/09/2010 ஆம் இலக்க சுற்றறிக்கையினை மாகாண திறைசேரி வெளியிட்டதன் மூலம் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் மீறப்பட்டிருந்ததுடன் கொள்வனவு நடைமுறைகளில் தவறான செயல்களை மேற்கொள்வதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தது.

## 5.5 நிதிகளின் குறைபயன்பாடு

மாகாண சபையின் அபிவிருத்தி வேலைகளின் பிரேரணைகளிற்காக பெறப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட செலவினம் என்பவற்றின் விபரங்கள் கீழே காணப்படுகின்றன.

| **மூலம்** | **அரசாங்க மானியம்** | **உள்ளபடியான செலவினம்** | **சேமிப்புகள்** |
|---|---|---|---|
| | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| பிரமாண அடிப்படையிலான மானியம் | 245 | 130 | 115 |
| மாகாண விசேட அபிவிருத்தி மானியம் | 1,000 | 600 | 400 |
| ஏனைய மானியங்கள் | 6,951 | 6,089 | 862 |
| | 8,196 | 6,819 | 1,377 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் சுகாதாரத்துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 100,000,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண விசேட அபிவிருத்தி மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளின் 40 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 400,000,000 தொகையான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக, அரசாங்கத்தால் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாதீட்டு ஏற்பாடுகள் ஊடாக வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மாகாண சபையால் முறைப்படி பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.6 வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்ட வளங்கள்

(அ) மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான ரூபா 11,000,000 பெறுமதியான கொபெல்கோ அகழ்ந்தெடுக்கும் இயந்திரம் அம்பாறை பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளரின் வேண்டுகோளிற்கமைய 2011 மார்ச் 31 இல் அம்பாறை பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் பிரயாணச் செலவினம், செயற்படுத்துனர் கூலி மற்றும் எரிபொருள் என்பவற்றுடன் மணித்தியாலத்திற்கு ரூபா 3,500 வீதம் வாடகைக் கட்டணம் ஒன்றைச் செலுத்துவதற்கு உடன்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட கூற்றின் பிரகாரம், 2011 ஏப்ரல் 01 முதல் நவம்பர் 30 வரை 569 மணித்தியாலங்கள் குறித்த அகழ்ந்தெடுக்கும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளரால் உடன்பட்டிருந்தவாறு ரூபா 1,991,500 தொகையான வாடகைக் கட்டணங்களை அவரிடமிருந்து பெறுவதற்கு வீதி அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
- அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் அகழ்தெடுக்கும் இயந்திரம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், விடுவித்திருந்த நோக்கத்திற்கு பயன்படுத்திய பின்னர் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.
- 2014 செப்தெம்பர் 25 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம், குறித்த அகழ்ந்தெடுக்கும் இயந்திரம் அக்கரைப்பற்று நீர் வளச் சபை அலுவலக வளவில் பயன்படுத்த முடியாத நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

- இந்த அகழ்ந்தெடுக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு மிகப் பெரியளவு அரசாங்க பணம் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த அகழ்ந்தெடுக்கும் இயந்திரத்தின் உள்ளபடியான தன்மையை திணைக்களம் அறியாதிருந்தது.

(ஆ) கிழக்கு மாகாணத்தில் பல்வேறு நீர்ப்பாசனங்களுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளை தீரத்துவைக்கும் நோக்குடனும் அட்டாளைச்சேனை பிராந்தியத்தில் நெல் பயிர்ச் செய்கைக்காக மேலதிகமாக 8,000 ஏக்கர் நிலத்தினை சேர்த்துக் கொள்வதற்கு இயலுமான விதத்திலும் மாகாண நீர்ப்பாசனத் திணக்களத்தினால் 2011 பெப்ரவரி 14 இல் ரூபா 19,628,116 கிரயத்தில் ‘‘பார்க் மவுன்டட் கொபெல்கோ’’ அகழ்ந்தெடுக்கும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அகழ்தெடுக்கும் இயந்திரம் அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட பின்னர் வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு திரும்ப ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

- அம்பாறை மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அகழ்ந்தெடுக்கும் இயந்திரத்தை விடுவிப்பதற்காக உடன்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம், மாகாண நீர்ப்பாசன பொறியியலாளர் (தம்பிலுவில் பிரிவு) இனால் காலரீதியான பரிசேதனை மேற்கொள்ளப்பட்டு மாகாண நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறானதொரு காலரீதியான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

- மேலதிகமாக 8,000 ஏக்கர் நெற் பயிர்ச்செய்கை நிலத்தினை சேர்த்துக்கொள்வதே இந்த அகழ்ந்தெடுக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கான நோக்கங்களில் ஒன்றாக இருந்தது. எவ்வாறாயினும், அகழ்ந்தெடுக்கும் இயந்திரத்தை கொள்வனவு செய்த பின்னர் 4 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் தற்போது வரை அந் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

## 5.7 ஆளணி நிர்வாகம்

மாகாணசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரித்த மற்றும் உள்ளபடியான ஆளணி தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) மாகாணசபையின் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்

| | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி | உள்ளபடியான ஆளணி | வெற்றடங்கள் |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 1,598 | 1,242 | 356 |
| மூன்றாம் மட்டம் | 1,600 | 1,260 | 340 |
| இரண்டாம் மட்டம் | 24,766 | 24,221 | 545 |
| ஆரம்ப மட்டம் | 7,196 | 6,293 | 903 |
| | 35,160 | 33,016 | 2,144 |

(ஆ) பாடசாலைப் பதவியணியினர்

| மாவட்டம் | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | | உள்ளபடியான எண்ணிக்கை | | மிகை | பற்றாக்குறை | |
|---|---|---|---|---|---|---|---|
| | அதிபர்கள் | ஆசிரியர்கள் | அதிபர்கள் | ஆசிரியர்கள் | ஆசிரியர்கள் | அதிபர்கள் | ஆசிரியர்கள் |
| திருகோணமலை | 342 | 4,496 | 230 | 4,532 | 104 | 112 | 68 |
| மட்டக்களப்பு | 425 | 5,585 | 365 | 5,567 | 30 | 60 | 48 |
| அம்பாறை | 514 | 7,007 | 419 | 7,566 | 587 | 95 | 28 |
| மொத்தம் | 1,281 | 17,088 | 1,014 | 17,665 | 721 | 267 | 144 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான மாகாண சபையின் உத்தியோத்தர்களின் பற்றாக்குறை 2,144 ஆக இருந்தது. எவ்வாறாயினும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கல்முனை, அம்பாறை, அக்கரைப்பத்து மற்றும் கின்னியா போன்ற வலயக் கல்வி அலுவலகங்களில் முறையே 255, 171, 98 மற்றும் 77 மிகை ஆசிரியர்கள் காணப்பட்ட போதிலும், மிகையான ஆசிரியர்கள் காணப்படுகின்ற பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் கற்குடா, திருகோணமலை, மஹாஓயா மற்றும் திருகோணமலை வடக்கு போன்ற வலய அலுவலகங்களில் நிலவிய

முறையே 48, 37, 28 மற்றும் 22 ஆன வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 சனவரி 1 இல் உள்ளவாறு கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் 55 தொழிலாளர்கள் மிகையான காணப்பட்டனர். இருப்பினும், தொழிலாளர்களிற்கு வெற்றிடங்கள் நிலவுகின்ற வலய அலுவலகங்களிற்கு அந்த மிகையான தொழிலாளர்களை இடம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) ஏறாவூரில் 51 நபர்கள், திருக்கோவிலில் 21 நபர்கள், திருகோணமலையில் 15 நபர்கள், பட்டிருப்பில் 11 நபர்கள், சம்மாந்துறையில் 10 நபர்கள் மற்றும் மட்டக்களப்பில் 2 நபர்கள் என இலங்கை ஆசிரியர் சேவைக்குரிய நூற்றிப் பத்து ஆசிரியர்கள் 110 பாடசாலைகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களிற்கு அதிபர்களாக 2 ஆண்டுகளிற்கும் மேலாக செயற்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், அதிபர் பதவியில் நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிழக்கு மாகாணத்தில் அதிபர்களிற்கான வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 267 ஆக இருந்த போதிலும், அதிபர் தரத்தினைச் சார்ந்த அலுவலர்கள் பல பாடசாலைகளில் ஆசிரியர்களாக செயற்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், பொருத்தமான பதவிகளிற்கு தகுதியுடைய நபர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பின்வரும் கல்வி வலயங்களில் கணிதம், ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பிரதான பாடங்களிற்கான ஆசிரியர்களில் மிகையும் பற்றாக்குறையும் காணப்பட்ட போதிலும், மாகாணத்தினுள் மிகையாகக் காணப்பட்ட பதவியணியை பற்றாக்குறை நிலவிய இடங்களிற்கு வழங்கி சமப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கல்வி வலயம் | கணிதம் | | ஆங்கிலம் | | தகவல் தொழில்நுட்பம் | |
|---|---|---|---|---|---|---|
| | மிகை | பற்றாக் குறை | மிகை | பற்றாக் குறை | மிகை | பற்றாக் குறை |
| கிண்ணியா | - | 11 | 04 | - | - | 26 |
| சம்மாந்துறை | 06 | - | - | 15 | 19 | - |
| திருக்கோவில் | 01 | - | 03 | - | 05 | - |
| ஏறாவூர் | - | 12 | - | 35 | - | 15 |
| திகோணமலை | - | 04 | 09 | - | - | 16 |
| கன்னன்குடா | - | 20 | - | 31 | - | 11 |
| பட்டிருப்பு | - | 59 | - | 08 | - | 15 |
| மட்டக்களப்பு | - | 23 | - | 42 | - | 27 |
| மொத்தம் | 07 | 129 | 16 | 131 | 24 | 110 |

## 5.8 வங்கி கணக்கிணக்கம்

02 மாகாண அமைச்சுக்கள் மற்றும் 10 மாகாண திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ரூபா 675,241 பெறுமதியான 98 மாற்றப்படாத காசோலைகள் தொடர்பில் நி.பி. 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 6.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மாகாண சபை மற்றும் அதன் ஒவ்வொரு அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்

போது 22 மாகாண திணைக்களங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டம் நடைபெற்றிருக்கவில்லை.

## 6.3 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம், மாகாண சபையின் மாகாண அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் 2013 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.4 ஆண்டறிக்கையினை முன்வைத்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட கிழக்கு மாகாண சபை 2008 மே 10 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் அதன் செயற்பாடுகளை தொடங்கியிருந்த போதிலும், 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிற்கான மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஒக்தோபர் 30 வரை பேரவையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 தீர்வுகாணப்படாத கணக்காய்வுப் பந்திகள் மீதான அவதானிப்புக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 250 வேலையற்ற இளைஞர்களிற்கு கொரிய மொழி கற்பித்தல் வகுப்புக்களை நடாத்துவதற்காக மாகாண நிதியிலிருந்து முற்பணமாக ரூபா 2,000,000 தொகை 2008 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொரிய மொழி வகுப்புகள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்டவாறு பாடநெறிகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன், முதலமைச்சரின் முன்னாள் செயலாளருக்கு செலுத்தப்பட்ட முற்பணம் 2013 ஒக்தோபர் 31 வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் ஒரு மாதத்திற்குள் விரிவான மற்றும் முன்னேற்றகரமான அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு முதலமைச்சரின் செயலாளருக்கு மாகாண அரச கணக்குகள் குழு 2013 ஒக்தோபர் 14 இல் பணிப்புரை விடுத்திருந்தது. இருப்பினும், இதுவரை அவ்வறிக்கை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வகம்

(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) வாகனங்களின் பாவனை

(ஊ) ஆளணி நிர்வாகம்